[1983 மார்ச் 4

(உ) நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

'' தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன் வடிவை அறிமுகம் செய்கிற நேரத்தில் நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சற்று முன்னால் பேசுகிற நேரத்தில் ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் டெல்லியில் இருக்கிற சுப்ரீம் கோர்ட்டில் தடை வாங்கியிருக்கிற கருத்தைச் சொன்னார்கள்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த பில்லில் பேசியது அந்த பில்லோடு முடிந்து விட்டது.

திரு. என். எஸ். வி. சித்தன் : இந்த நகராட்சி மன்றங்களைப் பொறுத்தவரையில், எங்கள் கட்சியைப் பொறுத்தவரையில் விரைவில் தேர்தல்களை நடத்த வேண்டும் என்பதுதான் எங்கள் கொள்கை, கருத்தே தவிர இந்தத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டும் என்றோ அல்லது அதற்காக வழக்குமன்றத்தில் தடை வாங்கவேண்டும் என்பதோ எங்கள் கட்சியின் கொள்கையும் இல்லை, கருத்தும் இல்லை, நாங்கள் அப்படி யாருக்கும் அனுமதி வழங்கவும் இல்லை என்பதை தெளிவாக சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இன்று நகராட்சி மன்றங்களில் மக்கள் பிரதிநிதிகள் இல்லாததால் பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவிடுவது, பல்வேறு ஆக்கப்பணிகள் முடங்கிக் கிடப்பதை பல்வேறு சமயங்களில் பார்க்கிறோம். இன்று அங்கே தனி அதிகாரிகள் இருப்பதால், மக்கள் பிரதிநிதிகள் இல்லாதிருப்பதால் லட்சக்கணக்கான மக்களின் நிலை இன்று பாதிக்கப்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இருந்து அவர்கள் கடமையை சரிவர செய்ய முடியாத நிலை இருக்கிறது. நகராட்சிமன்றங்களில் இருக்கிற ஆலோசனைக் குழுக்கள் கூட வெறும் ஆலோசனைக் குழுக்களாக இருக்கின்றனவே தவிர தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இருப்பார்களானால் நல்ல முறையில் செயல்பட ஏதுவாகும். எனவே விரைவில் நக

1983 மார்ச் 4] [திரு. என். எஸ். வி. சித்தன்]

ராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களை நடத்திட வேண்டும். அதற்கான தேதியை இந்தக் கூட்டத்தொடரிலேயே இந்த அரசு அறிவிக்க வேண்டுமென்று கேட்டு இந்த சட்ட முன்வடிவை அறிமுக நிலையிலேயே நான் எதிர்க்கிறேன்.

(முற்பகல் 9-30.)

திரு. பாபு ஜனார்த்தனன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் எதிர்க்கிறேன். காரணம், நகராட்சிகள் இன்றையதினம் கேட்பாரற்ற நிலையிலே இருக்கின்றன. தெரு விளக்குகள், மற்ற சுகாதார வசதிகள் போன்றவைகள் சரியான நிலைமையில் இல்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எங்களுடைய மாவட்டத்திற்கு வந்த போது, திருவண்ணாமலைக்கு வந்தபோது, ஜெனரேட்டர் கொடுக்கிறோம் என்று சொல்லி, 15 நாட்களுக்குள் அனுப்புவதாகச் சொன்னார்கள். அனுப்ப வேண்டுமென்ற நல்லெண்ணம் அவருக்கு இருக்கலாம். அங்கே நகராட்சி உறுப்பினர்களோ, தலைவரோ இல்லை. அவர்கள் அங்கே இருந்திருந்தால், இந்த விஷயத்தில் அக்கறை எடுத்துக்கொண்டு, அவர்களை அணுகியிருப்பார்கள். அவர் தான் சொன்னதை மறந்து விட்டார். இப்படி எத்தனையோ நகராட்சிகள் குடிதண்ணீர் வசதியில்லாமல், குறிப்பாக திருவத்திபுரம் நகராட்சியில் குடிதண்ணீர் வசதியில்லாமல் இருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால், அங்குள்ள அதிகாரிகளுக்கு அக்கறையில்லை. உங்களுக்கு தேர்தலை நடத்த வேண்டுமென்ற அக்கறையில்லை என்பதை மக்கள் உணர ஆரம்பித்துவிட்டார்கள். இனிமேலாவது தேர்தலை நடத்துவார்களா என்று சந்தேகப்படக்கூடிய நிலைமை மக்களிடையே ஏற்பட்டிருக்கிறது. மக்கள் பிரதிநிதிகள் அங்கே இல்லாத காரணத்தினால், எல்லாப் பொறுப்புக்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களே பதில் சொல்ல வேண்டிய நிலை இருக்கிறது. சட்டசபை ஆரம்பிக்கிற நேரத்தில், நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் இவ்வாறு செய்வது ஒரு மாமுலான பணியாக அமைந்திருக்கிறது. இது அவர்களின் திறமையான நிர்வாகத்தைக் காட்டவில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டு, நான் இந்த மசோதாவை எதிர்க்கிறேன்.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, நகராட்சிகளுடைய தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கூடிய இந்த முறை, இந்த ஆட்சி ஏற்பட்ட காலத்திலிருந்து தொடர்ந்து 6 மாதங்களுக்கு ஒரு முறை வந்து கொண்டிருக்கிறது. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய நிலையை அரசு எடுக்குமா என்று நான் சந்தேகப்படுகிறேன். ஏனென்று சொன்னால், இன்றைக்கு நகராட்சிகளுக்கு தேர்தல் நடந்து 13 ஆண்டுகள் ஆகிவிட்டன. ஊராட்சித் தேர்தலுக்கு முன்னால், இந்த நகராட்சித் தேர்தல் நடந்திருக்க

வேண்டும். நகராட்சித் தேர்தலைதான் முதலில் நடத்த வேண்டும். அந்தத் தேர்தலை நடத்தக்கூடாது என்று யாரும் கோர்ட்டுக்குப் போகவில்லை. பெண்கள், அரிசனங்கள் அங்கம் வகிக்கக்கூடிய நிலைமை கிடையாது. ஆகவே, இதிலே காலதாமதப் படுத்துவது எங்களுக்கு வியப்பாக இருக்கிறது. 100 நகராட்சிகள் தான் இருக்கின்றன. இந்த தேர்தலை நடத்தாததினால், இன்றைக்கு குடிதண்ணீர் பிரச்சனையானாலும் சரி, கக்கூஸ் பிரச்சனையானாலும் சரி, மின்சாரப் பிரச்சனையானாலும் சரி, அங்கே மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தினால், ஒன்றுமே செய்ய முடியவில்லை. அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு அவ்வளவு அதிகாரங்கள் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே, உடனடியாக தேர்தலை நடத்தவேண்டும். ஒவ்வொரு அசெம்பிளி கூட்டத்திலும், இப்படி கால நீட்டிப்பு மசோதா கொண்டு வருவதற்குப்பதிலாக ஒன்றைச் செய்யுங்கள். மொத்தமாக இந்த ஆட்சி எல்லா வேலைகளையும் கவனித்துக் கொள்ளும். எல்லா ஸ்தல ஸ்தாபனங்களுக்கும், நாங்கள் ஆட்சியில் இருக்கிறோம், அதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறோம் என்று ஒரு ஒட்டுமொத்தமான மசோதாவைக் கொண்டுவந்தால், மக்கள் புரிந்து கொள்ளுவார்கள். அதை விட்டுவிட்டு, 6 மாதங்களுக்கு ஒரு முறை இப்படி ஒரு நீட்டிப்பு மசோதாவைக் கொண்டு வருவதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் வன்மையாக எதிர்க்கிறேன்.

திரு. என். ஏ. பூங்காவனம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நகராட்சிகள் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிக்கும் இந்த திருத்த மசோதாவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக நான் ஆரம்பத்திலேயே ஆட்சேபிக்கிறேன்; வன்மையாக எதிர்க்கிறேன். இதற்கு அடிப்படைக் காரணம், நம்முடைய அமைச்சர் அவர்கள் 2, 3 முறை இதற்கு முன்னால், இந்த பிரச்சனை வருகின்ற போதெல்லாம், இந்தப் பிரச்சனையை எழுப்புகின்றபோதெல்லாம், இறுதியாக, உறுதியாக, அடுத்த முறை தேர்தல் வரும், மீண்டும் ஒத்தி வைக்கப்படமாட்டாது என்ற வாக்குறுதியைத் தந்தார்கள். ஆனால், இது மீண்டும் மீண்டும் வந்து கொண்டிருக்கிறது. நகராட்சிகளில் இன்றையதினம் குடிதண்ணீர் வசதி, சுகாதார வசதி இப்படி பல்வேறு பிரச்சினைகள், குறைந்தபட்சம் வரி கட்டுகின்ற பிரச்னை, தெரு விளக்குகள் போடுவது, குப்பையை வாறுவது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதுபோல், கக்கூஸ் பிரச்னைகூட தீர்க்கப்படாமல், கேட்பாரற்ற நிலையில் இருக்கிறது. இந்த மசோதாவை அறிமுகப்படுத்தும் நிலையிலேயே, இதைப் பின்வாங்கி, உடனடியாகத் தேர்தலை நடத்த அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும். இந்த மசோதாவை அறிமுகப்படுத்துவதை, நான் எதிர்க்கிறேன் என்று சொல்லி என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன்.

1983 மார்ச் 4]

*திரு. ப. நெடுமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த சட்டமுன்வடிவை அறிமுகம் செய்கின்ற நேரத்திலேயே என்னுடைய எதிர்ப்பை தெரிவித்துக் கொள்கிறேன். காரணம் ஊராட்சி ஒன்றியங்களுக்கு ரிசர்வேஷன் இருக்கிறது. அதிலே தகராறு ஏற்பட்டு, அந்தப் பிரச்சனை நீதி மன்றத்திலே இருக்கிறது. ஆனால், நகராட்சி மன்றங்களுக்கு அத்தகையப் பிரச்சனை எதுவும் இல்லை. குறைந்தபட்சம் நகராட்சி மன்றங்களுக்காவது தேர்தலை நடத்த இந்த அரசு முன்வர வேண்டுமென்ற காரணத்தினாலே இந்த சட்ட முன் வடிவிற்கு என்னுடைய கட்சியின் சார்பிலே எதிர்ப்பைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆண்டித்தேவர்: பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று அமைச்சரவர்கள் நகராட்சிகளுக்கு தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை நீட்டிப்பதற்காக கொண்டு வந்திருக்கிற மசோதாவை அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் எதிர்க்கிறேன். காரணம், தனி அதிகாரிகள் பதவிக்காலம் நீட்டிப்பு, நீட்டிப்பு என்று ஒவ்வொரு ஆறு மாதமும் ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுகிறார்கள். அப்படி நிறைவேற்றுகின்றபோது அடுத்தமுறை நீட்டிப்பு கேட்கமாட்டோம், கட்டாயம் தேர்தலை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். ஆனால் ஆறு மாதத்திற்கு ஒருமுறை இப்படி தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிப்பதனால் நகராட்சிகளிலே இன்றைக்கு அதிகாரிகள் ஆட்சிதான் நடந்து கொண்டிருக்கிறது. அதன் காரணமாகத்தான் இப்போது ஏற்பட்டிருக்கிற கடுமையான குடிநீர் பிரச்சனைகள் போன்றவைகளை இன்றைக்கு சமாளிக்க முடியாமல் இருக்கிறது. இருக்கின்ற நிலைமைகளை எடுத்துச் சொல்ல மக்கள் பிரதிநிதிகள் இல்லை. மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் எந்தப் பகுதியிலே என்ன நடக்கிறது, எந்தப் பகுதியிலே என்ன செய்ய வேண்டும் என்று எடுத்துச் சொல்வார்கள், காரியங்கள் நடக்கின்றனவா என்று பார்ப்பார்கள். அந்த அளவுக்கு தனி அதிகாரிகள் அக்கறை காட்டுவதில்லை.

பல்வேறு நகராட்சிகளில் 10, 15 ஆண்டுகளாக மக்கள் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் பொதுமக்கள் பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல யாரும் இல்லை என்பதையும், தனி அதிகாரிகளால் மக்கள் பிரச்சனைகளை தீர்க்க முடியவில்லை என்ற நிலையையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நன்றாக அறிவார்கள். அப்படி அறிந்திருந்தும் ஏன் இன்னும் காலம் கடத்துகிறார்கள் என்று தெரியவில்லை. மேலும், இந்த தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக்கூடாது. தேர்தலை நடத்த சட்டச் சிக்கல் ஒன்றும் இல்லை. ஆகவே, உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்கக் கூடாது என்பதால் இந்த மசோதா அறிமுகம் செய்யப்படுவதை நான் எதிர்க்கிறேன்.

திரு. ஆர். நவநீதகிருஷ்ண பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த தனி அதிகாரிகள் பதவிக்கால நீட்டிப்பு மசோதாவை காந்தி காமராஜ் தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே நான் வன்மையாக எதிர்க்கிறேன். இன்றைக்கு தனி அதிகாரிகள் அங்கே சர்வாதிகாரிகளாக நடந்து கொண்டிருக்கிறார்கள். மக்கள் பிரச்சனைகளை அவர்கள் கவனிப்பதாக இல்லை. பாலங்கள் கட்டினோம், ரோடுகள் போட்டோம் என்று கணக்கிலே எழுதிவிடுகிறார்கள். ஆனால் பாலங்கள் கட்டவில்லை; ரோடுகள் போடவில்லை. அவர்கள் தன்னிச்சையாக பணத்தைச் செலவிடும் சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் இருந்தால் இத்தகைய நிலைமைகள் ஏற்படாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. நெடுமாறன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல இன்றைக்கு நகராட்சித் தேர்தல்களை நடத்துவதற்கு எந்த விதமான சிக்கலும் இல்லை. ஆகவே, இந்த தனி அதிகாரிகள் நீடிப்பதை ரத்து செய்து, உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். அதனால் இந்த மசோதாவை அறிமுகம் செய்வதை நான் எதிர்க்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவரவர்களே, நகராட்சி மன்றங்களிலே இருக்கக்கூடிய தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை நீட்டிக்க வேண்டிய ஒரு கட்டாயம் நமக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் நகராட்சிகளுக்கும், மாநகராட்சிகளுக்கும் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும் என்ற அடிப்படையிலே ஏற்கனவே கடந்த சட்டமன்றக் கூட்டத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அனைத்துக் கட்சித் தலைவர்களும் எந்தத் தேதியிலே தேர்தலை நடத்தலாம் என்று சொல்கிறார்களோ அந்தத் தேதியில் தேர்தலை நடத்த வேண்டும் என்பதை நாங்கள் ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று தெளிவாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

வருகின்ற 7-ம் தேதி இந்த சட்ட முன்வடிவு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட இருக்கிறது. ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்போது அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை எப்போது கூட்டுவது என்ற முடிவை அறிவிக்க இருக்கிறோம். ஆகவே அப்போது விளக்கமாகப் பேசவும், விரிவாக கருத்துக்களை எடுத்துச் சொல்லவும் வாய்ப்பு இருக்கிறது. 7-ந்தேதி அன்று எப்போது சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டலாம் என்றும் எப்போது தேர்தலை நடத்தலாம் என்றும் நாம் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குறிப்பாக திருவண்ணாமலை நகராட்சியைப் பொறுத்தவரையில் அவர்கள் ஜெனரேட்டர் வாங்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கனவே இந்தக் கருத்தை நான்தான்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1983 மார்ச் 4] [திரு. ப. குழந்தைவேலு]

அங்கே நடைபெற்ற ஒரு விழாவிலே எடுத்துச் சொன்னேன். காரணம் திருவண்ணாமலை நகராட்சிக்கு ஜெனரேட்டர் வாங்க பண வசதி இல்லை. அதனால் அவர்களால் ஜெனரேட்டர் வாங்க முடியவில்லை. அதனால் அரசாங்கத்தின் உதவியைப் பெற்று ஜெனரேட்டர் வாங்கித்தரும் பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன் என்ற ஒரு உத்தரவாதத்தை அந்த விழாவிலே தெரிவித்தேன்.

கொடுக்கப்பட்ட உத்தரவாதம் செயலாக்கப்பட கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். அதிலே காலதாமதம் இல்லை. குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பிலே இருந்தபோதுகூட இதைப்போன்ற தட்டுப்பாடு திருவண்ணாமலை நகரில் வந்திருக்கிறது. அப்போது ஜெனரேட்டர் வாங்கிக் கொடுக்கப்படவில்லை. ஆனால் இந்த நல்ல காரியத்தை அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு செய்யப்போகிறது என்பதை நான் தெரிவிக்க கடமைப் பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 9-40)

குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சித்தன் அவர்கள் ஒரு சில கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அனைத்துக் கட்சித் தலைவர்களும் ஒன்று கூடி ஏற்கனவே முடிவெடுத்தோம். அந்த முடிவின் அடிப்படையில் பஞ்சாயத்து தேர்தலை முதலிலே நடத்துவது என்றும் நகராட்சித் தேர்தலை அதற்கடுத்து நடத்துவது என்றும் அதன் பின்னர் மாநகராட்சித் தேர்தலை நடத்தலாம் என்றும் முடிவினை எடுத்து.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இது சட்ட முன்வடிவு அறிமுக நிலைதான். எனவே விரிவாகப் பேசிக் கொண்டே போகக்கூடாது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அவர்கள் கேட்டதற்கு விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறேனே தவிர வேறல்ல.......... (குறுக்கீடுகள்)......தேர்தலை சீக்கிரமாக நடத்துவதற்காகத் தான் இந்தத் தனி அதிகாரிகளின் பதவிக்காலத்தை நீட்டிக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கிறோம். அதுமட்டுமல்ல (குறுக்கீடுகள்)......தனி அதிகாரிகள் பதவிக் காலத்தை 6 மாதத்திற்கு நீட்டித்தாலும் அதற்குள்ளாக தேர்தலை நடத்த வேண்டும் என்றால் தேர்தலை நடத்தலாம். அதிலே தடை ஒன்றும் இல்லை. ஆகவே இந்த சட்டமுன்வடிவு அறிமுகப்படுத்துவதை ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு நகராட்சி மன்றங்கள் (தனி அதிகாரிகள் நியமனம்) திருத்தச் சட்ட முன்வடிவு அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இச் சட்டமுன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

(ஊ) சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவு, 1983.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன். ''1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 1983 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்த) சட்டமுன்வடிவை அறிமுகம் செய்வதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக நான் எதிர்க்கிறேன். கடந்த 8 ஆண்டுக் காலமாக சென்னை மாநகராட்சி கலைக்கப்பட்ட நிலையில் 9-வது ஆண்டும் வந்து கொண்டிருக்கின்றது. சென்னை மாநகராட்சியினை உருவாக்கிய மேட்லி துரை அவர்கள் சென்னை மாநகராட்சிக்கு குடிநீர் வடிகால் திட்டத்தினை ஏற்படுத்துகின்ற போது 50, 60 ஆண்டுகளுக்குப் பின்னால் சென்னை மாநகராட்சியின் ஜனத்தொகை 20 இலட்சம் இருக்கும் என்று கணக்கிட்டு அதற்கேற்றார்போல் திட்டத்தைத் தீட்டினார்கள். ஆனால் இன்றைய தினம் சென்னை மாநகராட்சியின் மக்கள் தொகை 40 இலட்சத்தினை எட்டி இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். அந்தக் காலத்தில் 60 வட்டங்களாக இருந்தது, இன்றைக்கு சென்னை மாநகராட்சி 150 வட்டங்களைக் கொண்டதாக ஆக்கப்பட்டு மக்கள் தொகையும் அதிகமாகி இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் மக்களின் பிரதிநிதிகள் இல்லாத காரணத்தால் மாநகராட்சியின் பணிகள் இன்று மிகவும் தேங்கி இருக்கின்றது என்பதை எல்லா கட்சியினரும் ஏற்றுக் கொள்வார்கள்.

இன்றைக்கு சாக்கடைகளைப் பொறுத்தவரையில் ஆங்காங்கே அதனுடைய மூடிகள் திறக்கப்பட்ட நிலையில் மக்கள் நடந்து சென்று கொண்டிருக்கும்போது அவர்கள் அந்தப்